திரிசனச்சுடர்

ஏப்ரல் 1984

பூரண கீழ்படிதல்

அமெரிக்காவிலுள்ள 'போர்டு' கார் தயாரிப்பு நிறுவனத்தின் முதலாளியான ஹென்றி போர்டிடம் நீக்ரோ பட்டதாரி ஒருவன் 'டிப்டாப்' உடையில் வேலை வேண்டிச் சென்றான். போர்டு அவனிடம் அவரது தொழிற்கூடத்தில் ஒரு மூலையில் கிடந்த செங்கற் குவியலை வலதுபுறம் எடுத்து அடுக்குமாறு கூறினர் மறுபடியும் அவைகளை இடதுபுறம் எடுத்துவை எனப் பணித்தார். பின்பு மாலையில் அவற்றை மீண்டும் வலதுபுறம் அடுக்குமாறு ஆணையிட்டார் மறுநாள் அவன் வேலைக்கு வந்தபோது அவற்றை முதலிலிருந்த இடத்திலேயே அடுக்குமாறு கட்டளையிட்டார். நீக்ரோ மனிதனும் சலிப்பின்றி மீண்டும் போர்டு சொன்னவண்ணமே இடம் மாற்றி அழகாக அடுக்கி வைத்தான் இச்செயல் ஒருவேளை நமக்கு அற்பமாகவும், அறிவின மாகவும் தோன்றலாம்

காலம் உருண்டோடியது ஒரு நாள் அரசாங்கத்திற்குச் சொந்த மான நிலம் ஒன்று ஏலம் விடப்பட்டது. ஒருவர் மாற்றி ஒருவர் தொகையை உயர்த்திச் சொல்லிக் கொண்டிருந்தார்கள் கடைசியாக ஒருவர் இரண்டு கோடி டாலர்களுக்கு அதை ஏலம் எடுத்தார். ஏலம் கேட்க வந்தவர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம். "இவ்வளவு பெரிய தொகைக்கு ஏலம் எடுத்தவர் யார்?" என்று கேட்க, அந்த நீக்ரோவா "நான் ஹென்றி போர்டின் பிரதிநிதி அவருக்காக ஏலம் எடுத்தேன்" என்று பெருமையுடன் கூறினான். நீக்ரோவின் கீழ்படிதல் அவனை எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறது பார்த்தீர்களா?

"பலியைப் பார்க்கிலும் கீழ்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்"

1 சாமுவேல் 15 : 22 (b)

[redacted]

EU., EGF., ஜெப செய்தி மலர்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

தரிசனச் சுடர்...

தரிசனம்	சுடர்
3	8

Editor :
JAMES RATNARAJ

சிறப்புச் செய்தி 3

மாணவர் பகுதி 5

வேத ஆராய்ச்சி 9

ஜெபத்துணைவன் 11

கேள்வி பதில் 13

வாழ்க்கையின் முடிவில் 14

ஆண்டுச் சந்தா
மாணவர்க்கு ரூ 5/-
மாணவரல்லாதோர்க்கு ரூ 10/-

தொடர்பு முகவரி :

THARISANA SUDAR
UESI-TN OFFICE
Guru Medical Hall
TIRUCHI-17.

ஆசிரியரிடமிருந்து

கிறிஸ்துவிற்குள் அன்பான வாசகர்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்

வியாதியால் தாக்கப்பட்டு, மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த மகனை எப்படியாகிலும் காப்பாற்ற வேண்டும் என்ற ஏக்கத்தோடு, மருத்துவமனையில் இரவு பகலாக கண் விழித்திருந்தார் அவன் தந்தை. அவன் உயிரைக் காக்க தன் உடமைகளையெல்லாம் விற்று செலவிட்டார்.. ஒரு நபரின் உயிருக்காக சொற்பகால வாழ்விற்காக இத்தனை முயற்சி. கரிசனையென்றால் அழியும் ஆயிரம் கோடி, மாந்தரின் மீட்பிற்காய் எவ்வளவாக முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்... ஆத்தும ஆதாயப் பணியில் ஈடுபடும் நாம் செலவு பண்ணி, செலவு பண்ணப்பட்டு, 'தியாக வாழ்க்கை' வாழாவிடில் மரணத்தை நோக்கி ஓடும் இம் மக்களைத் தப்புவிப்பது எங்ஙனம்?

வரும் கோடை விடுமுறையில் மிக முக்கியமான பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டியதிருக்கிறது நமது ஐக்கியத்தில் உள்ள விசுவாசிகளுக்கென 'தலைமைத்துவ பயிற்சி முகாம்களை' (Leadership Training Camps) தமிழகம் முழுவதிலும் நடத்துகிறோம்; விபரங்களை இதழினுள்ளே காணவும். ஆயத்தப் பணிகளுக்காகவும், ஆவியானவரின் கிரியைக்காகவும் ஜெபியுங்கள் மே 4-6யில் தமிழக பட்டதாரிகள் ஐக்கியத்தின் ஆலோசனைக் கூட்டம் ஒன்றும் (TNEGF Council'84) திருச்சியில் நடைபெற உள்ளது.

நீங்கள் உங்கள் சந்தாக்களையும், நன்கொடைகளையும் அனுப்பிக் கொண்டிருப்பதற்காக நன்றி. மாணவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய புதிய முழுநேரப் பணியாளர்களை தேவன் எழுப்ப, நமது மாதாந்திர தேவை ரூ. 15,000 சந்திக்கப்பட உங்கள் ஊக்கமான ஜெபம் தேவை கர்த்தரின் கிருபை உங்களனைவரோடுங் கூட இருப்பதாக.

இப்படிக்கு ஜேம்ஸ் இரத்தினராஜ்

சிறப்புச் செய்தி :

பாரெங்கும் பற்றியெரியட்டும் (திரு. ஜேம்ஸ் இரத்தினராஜ்)

1932ஆம் ஆண்டு மாரி மான்சன் என்பவர் மூலமாக, ஒரு பெரிய எழுப்புதலைக் கட்டளையிட்டார் தேவன். அதன் விளைவாக பல தலைவர்கள் சிறையில் தோன்றினர். இது தான் சிறையின் சரித்திரத்தில் ஏற்பட்ட கடைசி எழுப்புதல். இது போல அமெரிக்க தேசத்தில் 1820ம் ஆண்டு சார்லஸ் ஃபின்னி மூலமாக தேவன் ஒரு எழுப்புதலை அனுமதித்தார்.

ஏறத்தாழ கி.மு. 535ல் தொடங்கப்பட்ட ஆலயம் கட்டும்பணி, விரோதிகளின் எதிர்ப்பு, சட்டத்தின் பயமுறுத்துதல், இவைகள் காரணமாக சுமார் 15 ஆண்டுகள் கைவிடப்பட்டது. ஆம் தேவனுடைய ஊழியத்தைத்துவங்கும் பொழுது அதிகமான எதிர்ப்புகளும், தடைகளும் உண்டாவது ஆச்சரியமல்ல. ஆனால் மனுப்புத்திரரைக் கண்ணோக்கும் தேவன் சோர்ந்திருந்த உள்ளங்களை 'ஆகாய்' என்னும் தீர்க்கதரிசி மூலமாகத் தட்டி எழுப்பி, எச்சரித்தார். உற்சாகமடைந்த மக்கள் அம்மாபெரும் பணியைச் செய்து நிறைவேற்றினர். இது பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஏற்பட்ட ஒரு எழுப்புதல்.

ஊழியம் சோர்ந்துபோயிருக்கும் நேரத்தில், ஆவிக்குரிய நிலைமை மோசமாக இருக்கும் வேளையில் தேவன் அருளும் இவ்வித உயிர்மீட்சிகளின் மூலம் மக்கள் தங்கள் நிலையை உணர்ந்து, பாவங்களை அறிக்கையிட்டு பழைய வாழ்க்கையைச் சீர்ப்படுத்துகின்றனர் தேவ ஊழியத்தில் பங்கெடுக்கின்றனர். தேவ ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்கின்றனர்.

மூவாண்டுப் பெருவிழாவின் மூலமாக எழுப்புதலடைந்து ஊழியத்தை ஆரம்பித்திருக்கும் நாம் சற்று கவனத்தோடு இதை வாசிப்போமா?

தேவன் பயன்படுத்தும் மனிதன் :

பின்வாங்கி, குளிர்ந்துபோன நிலையிலுள்ள மக்களுக்கு எழுப்புதல் 'ஆகாய்' என்ற தீர்க்கன் மூலம் வந்தது. இந்த ஆகாய் தேவனோடு கூட நெருங்கி வாழ்ந்தான்; உலகத்தை வெறுத்து ஒதுக்கியதால் ஆகாய் தன்னைக் கறைப் படுத்திக் கொள்ளவில்லை. தேவனோடு அதிக நேரம் தனித்திருந்தான். எனவே தேவனுடைய ஆலயம் கட்டப்படவில்லையே! என்ற தேவனுடைய ஏக்கம் இவனுள்ளத்திலும் பற்றி எரிந்தது. இப்படிப்பட்ட அனுபவ ரீதியில் எழுப்புதல் என்னும் சுடர் அவனைச் சுற்றியிருந்த மக்களிடம் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. ஆம்! எழுப்புதல் ஒரு தனி மனிதனிடம் ஏற்பட்டு சுற்றியுள்ள நண்பரிடம் பரவி, பின் சமுதாயத்தைப் பற்றிக்கொள்ளும். ஏறக்குறைய இருமாதங்களுக்கு முன் உன் உள்ளத்தில் பற்ற ஆரம்பித்த எழுப்புதல் என்னும் சுடர், தியாக தீபம் மற்றவரிடம் பரவியுள்ளதா? இல்லை ஐக்கியக் குறைவினால் அச்சுடர் மங்கிப்போய்விட்டதா?

எழுப்புதல் தரும் செய்தி :

இது பாவ உணர்வைக் கொடுக்க வேண்டும். அசதியாயிருக்க அவகாசமில்லை என்ற அறைகூவலாக அமையவேண்டும். ஆகாய் தீர்க்கனின் செய்தி அன்று வாழ்ந்த தலைவனாகிய செருபாபேலையும்; பிரதான ஆசாரியனாகிய யோசுவாவையும் தங்கள் நிலைமையைச் சிந்திக்க வைத்தது. தேவனிடத்தில் ஆதியில் கொண்ட அன்பைவிட்ட நிலையையும், செய்ய ஆரம்பித்த ஆலய பணியைச் செய்யத் தவறியதையும் எண்ணி மனம் வருந்தி அசதியையும், சோம்பலையும் தள்ளிவிட்டு தேவசமூகத்தில் திரும்பி, ஆலயத்தைக் கட்டும் பணியைச் செய்யத் திரும்பினர். எழுப்புதல் என்னும் தீபத்தை உள்ளத்தில் ஏந்தியுள்ள தீவிரவாதியே! உன் செய்திகள், செயல்கள் மூலம் இத்தகைய எழுப்புதல் உண்டா ?

எழுப்புதலின் விளைவு :

ஆகாய் கால எழுப்புதலின் விளைவாக ஜனங்களின் உள்ளங்கள் நொறுக்கப்பட்டன. மக்கள் தேவ வசனத்துக்குக் கீழ்ப்படிந்தனர். தேவபணியில் அலாதி அக்கறை காட்டினர். புதியதொரு ஆலயம் விரைவாகக்கட்டி முடிக்கப்பட்டு தேவ மகிமையால் நிறைந்தது.

இயேசு கிறிஸ்துவின் உயர்பணியில் ஈடுபட்டுள்ள நம்மத்தியிலும் ஒரு மாபெரும் எழுப்புதல் ஏற்பட்டிருப்பது உண்மையே. ஆனால் இந்த எழுப்புதலின் விளைவாக நம் பகுதியில் பட்டதாரிகள், கல்லூரிகள், மேல்நிலைப்பள்ளிகள் மத்தியில் புதிய ஜெபக்குழுக்கள், வேத ஆராய்ச்சிக்குழுக்கள், ஜெப ஐக்கியக் குழுக்கள் உருவாகியுள்ளனவா? இயங்கிவரும் குழுக்கள் புதிய தரிசனத்தோடு, புதுவேகத்தோடு செயல்பட ஆரம்பித்துள்ளனவா?

எழுப்புதலுக்கு தேவன் அளிக்கும் உதவி :

ஆகாயின் செய்தியால் விழிப்புணர்வடைந்த செருபாபேல், யோசுவா இவர்களிடையே ஆவியானவர் வல்லமையாக செயல்பட்டார். இந்த ஆவியானவருடைய பெலத்தினாலேயே தேவனுடைய ஆலயத்தைக் கட்டி முடித்தனர். இதுமட்டுமல்லஅந்நாட்களில்நடந்த எழுப்புதல் மூலம் யூதரை அடிமைப்படுத்தி வந்த புறஜாதியின் சக்திகளை தேவன் அசைத்தார். மற்ற சாம்ராஜ்ஜியங்களையும் அசைப்பேன் என்று தேவன் வாக்குக் கொடுக்கிறார்.

எழுப்புதலை உன்னில் ஆரம்பித்த தேவன் உன்னைத் தனியே போரிடவிட்டுவிடவில்லை அமைதியாக ஆவியானவர் கிரியை செய்ய ஆரம்பித்துவிட்டார். நிச்சயம் தேவன் உனக்கு, பக்கத்துணையாய் நின்று உதவி செய்வார். உன்னை எதிர்க்கும் அந்தகார சக்திகளை வெல்ல தேவன் பெலன் கொடுப்பார். ஊழியத்தில் புதிய திருப்பங்களையும் கட்டளையிடுவார்.

எழுப்புதலை ஊக்குவிக்கும் வாக்குத்தத்தங்கள் :

எழுப்புதல் என்னும் தீயைப் பற்றி எரியவைத்துள்ள தேவன் நம்மை போரடிப்பதற்கு புதிதும், கூர்மையுமான பற்களுள்ள எந்திரமாக்குகிறேன், என்கிறார். மட்டுமல்ல (தொடர்ச்சி 6ம் பக்கம்)

மாணவர் பகுதி

கிறிஸ்துவுக்குள் அன்பான மாணவ மாணவிகளுக்கு,

கர்த்தர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நேற்றுத்தான் கல்லூரிக்குள் முதலாண்டு மாணவர்களாய் நுழைந்ததுபோல் தோன்று கிறது. ஆனுல் இன்று உங்களில் பலர் படிப்பை முடித்துவிட்டு வெளி-யேறும் நேரம் வந்துவிட்டது. ஒவ்வொரு கல்வியாண்டும் நொடிப் பொழுதில் ஓடிமறைவதைப்போல் தோன்றுகிறது.

கல்லூரி நாட்களில் கருத்தாய் நற்செய்திக் கூட்டங்களை ஏற்பாடு செய்தீர்கள், சுவிசேஷ கைப்பிரதிகளை காண்போர்க்கெல்லாம் கொடுத்-தீர்கள், ஜெபக்கூட்டங்களை நடத்தினீர்கள். மிகவும் போற்றும்வண்ணம் கர்த்தருக்கு ஊழியம் செய்தீர்கள் நல்லது.

செமஸ்டர் காலங்கள் என்னவோ முடிந்துவிடுகிறது உண்மை தான். ஆனுல் அதற்குரிய பாடத்தை முடித்து வருகிறீர்களா? என்ற வினு, என் எண்ணத்தில் எழுந்தது. சில நாட்களுக்குமுன் உங்களில் சிலரின் மதிப்பெண் அட்டைகளைப் பார்க்க நேர்ந்தபோது ஆச்சரியப்பட்டேன். அதில் பல பாடங்களில் "AAA" என்று இருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றேன்.

என் கல்லூரி நாட்களைப்பற்றிய எண்ணம். எழுந்தது. 1961-ம் ஆண்டு P. U. C. படித்துக் கொண்டிருந்தேன். அப்போது அங்குசில விசுவாச மாணவர்கள் தீவிரமாக நற்செய்தியைச் சொல்லி ஆத்தும ஆதாயப்பணி செய்து வந்தார்கள். நானும் ஆண்டவரை ஏற்றுக் கொண்டு அந்த ஜெபக்குழுவில் ஒரு அங்கமானேன். தேர்வு நெருங்க நெருங்க அவர்களோடு உள்ள உறவைக் குறைத்துக்கொண்டு கர்த்தரின் துணையோடு கடமை உணர்வோடு கற்று வந்தேன்.

தேர்வு வந்தது. தேர்வு முடிவுகளும் வந்தது அந்த ஜெபக் குழுவில் சுமார் பதினைந்துபேர் இருந்தார்கள். அதில் தலைவரையும் என்னையும் தவிர மற்ற அனைவரும் தோல்வி அடைந்தனர். அதனுல் அடுத்த ஆண்டு B. Sc ல் சேர்ந்த நான் ஜாக்கிரதையாக அந்த விசுவாச மாணவர்களை விட்டு விலகினேன். விளைவு - ஆண்டவரை விட்டே விலகிச் சென்று விட்டேன்

இன்று உங்கள் செமஸ்டர் முடிவுகளைக் கண்டு தேவனை விட்டு எத்தனைபேர் தூரம் போகின்றனர்? அல்லது உங்கள் கல்வித் தேர்ச்சி மூலம் தேவநாமம் துதிக்கப்படுகிறதா ? தூஷிக்கப்படுகிறதா ?

சகோதர, சகோதரிகளே! மனப்பாட ஆற்றல் குறைவானுலும் சரி, சரீர சுகவீனமானுலும் சரி, சம்பூரணரான நமதாண்டவரிடம் விசுவாசத்தோடு கேளுங்கள் பெற்றுக் கொள்வீர்கள். (1 யாக் 1 : 5)

தேர்வு காலம் நெருங்கிவிட்டது. தீவிரமாக படித்துக் கொண்டு இருப்பீர்கள் என நம்புகிறேன். "வெற்றி, வெற்றி, வெற்றி, இயேசுவின் நாமத்தில் வெற்றி, என்று உற்சாகமாகப் பாடும் நீங்கள் எல்லாத் தேர்வுகளிலும் வெற்றி பெற வேண்டுகின்றேன்.

தேவனுக்குத்தான் எப்போதும் முதலிடம். ஆனால் கடமையை கருத்தோடு செய்யும் விசுவாசியை தேவனும் அதிகம விரும்புவார். அடுத்த கல்வியாண்டில் நாம் சந்திக்கும்போது ''எல்லாப் பாடங் களிலும் முழு உழைப்பைப் பயன்படுத்தி உச்ச மதிப்பெண்கள் பெற்று விட்டோம்.'' எனக் கேட்டு மகிழும் சூழ்நிலையை உருவாக்குங்கள்.

அதுவே உங்கள் பெற்றோருக்கும், ஆசிரியர்க்கும் எங்களைப் போன்ற மூத்த சகோதரர்க்கும் நீங்கள் செய்யும் பெரிய உதவியாகும் முயற்சிக்கேற்ற பலன் கிடைக்க ஜெபிக்கிறோம். தேர்வில் வெற்றி பெறக் கடைசியாக சில ஆலோசனைகள்.

1. ஜெபித்து திட்டமிட்டு புரிந்து படியுங்கள்.

2. குறிப்புகளை எடுத்தும், ஒருவர் கட்டுரையை மற்றவருடன் ஒப்பிட்டும் படியுங்கள்.

3. படித்தவைகளைப் பார்க்காமல் எழுதிப்பாருங்கள். (தேர்விலுமகூட பார்க்காமல்தானே எழுதவேண்டும்!)

4. வெயில்காலம் ஆதலால் நண்பகலில் ஒரு மணி நேரமாவது ஓய்வெடுத்துப் படியுங்கள்.

5 உடற்சோர்வு ஏற்படாவண்ணம் நல்ல உணவு உட்கொள்ளுங்கள்.

'கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது

இப்படிக்கு,
உங்கள் அண்ணன்
J. செல்லப்பா.

(4-ம் பக்க தொடர்ச்சி)

''நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கி விடுவாய்,'' ''யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறு கூட்டமே, பயப்படாதே நான் உனக்கு துணைநிற்கிறேன்'' என்றும் கூறுகிறார். ஆகாய் கால மக்களுக்கு சொன்னதுபோல இன்று தேவ பணியை ஆரம்பித்திருக்கிற உங்களுக்கு அவர் தரும் வாக்குகள்:

''நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்''

''நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்... உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன்''

''நீங்கள் திடன் கொள்ளுங்கள் வேலையை நடத்துங்கள்''

இவ்விதம் வாக்குத்தத்தங்களால் உங்களை ஊக்குவிக்கும் தேவனின் வாக்கை நம்பி, அவர் பெலத்துடன் ஒத்தாசையுடன், தேவையுடனும், ஏக்கத்துடனும் வாழும் கல்லூரி, மேல்நிலைப்பள்ளி மாணவர் மத்தியிலும் பட்டதாரிகள் மத்தியிலும் உற்சாகத்துடன் அதி தீவிரமாய் ஊழியம் செய்வோம். எழுப்புதல் என்னும் சுடரை என்றும் அணையாமல் காப்போம்.



திதாக இணைக்கப்பட்டுள்ள நற்செய்தி மாணவர் மன்றங்கள் (E. U' &):
1. அம்பை - ஆழ்வார் (V. K Puram) 2. சிவகாசி.

ழே கொடுக்கப்பட்டுள்ள இடங்கள் நற்செய்தி மாணவர் மன்றங்களுடன் ணைக்கப்பட உங்கள் ஊக்கமான ஜெபம் தேவை

றந்தாங்கி	7. செங்கல்பட்டு	13. தர்மபுரி
ருப்புக்கோட்டை	8. நாகபட்டினம்	14. தாராபுரம்
ம்பூர்	9. நாசரேத்	15. திருப்பூர்
லட்சுமிபுரம்	10. நாமக்கல்	16. திருச்செந்தூர்
ராணிப்பேட்டை	11. நெய்வேலி	17. திருவில்லிபுத்தூர்
சூர்	12. பழனி	18. திண்டுக்கல்

மிழ் நாட்டில் கல்லூரி, மேல்நிலைப்பள்ளி உள்ள எல்லா இடங்களிலும் ற்செய்தி மாணவர் மன்றம் எழும்பிட கருத்தாய் ஜெபியுங்கள்.

தமிழ் நாடு

பல்கலைக் கழகங்கள் :-

1. சென்னை
2. அண்ணாமலை - சிதம்பரம்
3. மதுரை - காமராஜ்
4. அண்ணா தொழில் - சென்னை
5. பாரதியார் - கோவை
6. வேளாண்மை - கோவை
7. பாரதிதாசன் - திருச்சி
8. தமிழ் - தஞ்சை
9. கிராமியம் - காந்திகிராமம்
10. அன்னைதெரசா – கோடை (பெண்கள்)

மேல் நிலைப்பள்ளிகள்:-

	எண்	மாணவர்கள்	ஆசிரியர்கள்
ஆங்கிலோ இந்தியன்	26	28,000	891
மெட்டிரிக் குலேஷன்	33	31,000	1,252
மத்திய அமைப்புக்குழு	187	65,000	2,873
தனியார், அரசினர்	1,288	14,45,000	53,734
தொழில் சார்ந்த	14	1,680	—

கல்லூரிகள்:

அரசினர்	52	1,71,140	4,031
தனியார்	135		8,775
மற்றவை	46	6,272	544
இசை, பயிற்சி; (சமூகசேவை)			

தொழில் கல்லூரிகள் :

மருத்துவம்	12	9,191
வேளாண்மை	2	1,700
சட்டம்	4	3,474
கால்நடை மருத்துவம்	1	740
பொறியியல்	14	15,497
தொழில் நுட்பம் Polytechnic	50	
தொழில் பயிற்சி (ITI)	150	17,057

பொதுவான குறிப்பு ;

மக்கள் தொகை : 4,82,90,000 கிராமங்கள் : 20,735

எழுதப் படிக்கத் தெரிந்த ஆண்கள் : 57·98 % பெண்கள்: 34·91%

கிறிஸ்தவர்கள் - 5·57%

80 %க்கு அதிகமான மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர்

இன்னும் அனேக கிராமங்களில் கிறிஸ்தவர்களும், தொழு கொள்ள ஆலயமும் இல்லை.

வேத ஆராய்ச்சி :

போதனைகளை சாதனைகளாக்கியவர்

சி. பர்னபாஸ்

''பவுல் அப்போஸ்தலன் என் ஆவிக்குரிய வாழ்க்கையின் கதா நாயகன். அவர் வாழ்க்கையும் செயலும் என்னை புரட்சிகரமான வாழ்க்கை நடத்த ஏவுகிறது'' என்று Dr. ஜான் லீ கூறுகிறார். அதே போல Dr A.W. டோசரும் அவரைப் பற்றி "உலகத்தில் வெற்றிகரமாக வாழ்ந்த கிறிஸ்தவர் பவுல். உலக சரித்திரத்தில் அவர் ஆற்றிய பணி ஆச்சரியப்படக்கூடியது...... அவர் ரோமச் சிறைச் சாலையில் மரிக்கும் வரை எல்லாவற்றையும் சிறப்புற திட்டப்படச் செய்து முடித்தார்'' என்று எழுதுகின்றார். இப்படி உயர்வாக போற்றப்பட்டு, இன்றைய திருச்சபைக்குத் தேவையான சித்தாந்தங்களை எழுதி வைத்து, போதனைகளை தன் சாதனையில் காட்டிய பவுலுடைய சில குணங்களை இங்கு பார்க்கலாம்.

1 அழைப்பு:- '' கிறிஸ்தவம் தேவனுடைய வெளிப்பாடு என்பதை பவுலின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றமே நிரூபிக்கின்றது'' என்று லிட்டென்டன் என்பவர் எழுதுகிறார். தேவ பணிக்காக பவுலின் அழைப்பு தெள்ளத் தெளிவாக உள்ளது. பவுல் இதைப்பற்றி, '' நீ போ, நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்தில் அனுப்புவேன்'' (அப் 22:21) என்று கூறுகிறார். அனனியாவிடத்தில் தேவன், '' நீ போ, அவன் புறஜாதிகளுக்கும், இராஜக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான்தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்'' (அப்9:10) என்று கூறுகிறார். தேவன் முதலாம் நூற்றாண்டில் அவர் பணியை நிறைவேற்ற தன்னை அழைத்தார் என்பதை பவுல் தெளிவாக அறிந்திருந்த படியால் அழைத்த அழைப்பிற்கு பாத்திரமாக நடந்து கொண்டார். இன்று ஆண்டவர் நம்மை எதற்காக அழைத்திருக்கிறார் என்பதை அறிந்து அழைத்த அழைப்புக்கு பாத்திரமாக இப்போது வாழ தேவன் உதவுவாராக.

2. அர்ப்பணிப்பு: '' உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுங்கள்'' (ரோமர்12:1) என்று ரோமருக்கு எழுதுகிறார். இது அவருடைய அனுபவத்திலிருந்து தோன்றும் அறிவுரை அர்ப்பணிப்பதினால் மனம் புதிதாகும் (ரோமர் 12:2) என்றும் எழுதுகிறார். மேலும் நீங்கள் உங்கள் அவயவங்களை தேவனுக்கு அர்ப்பணிக்கும்போது '' பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன்'' (ரோமர் 6:22) என்று அவர் வாழ்க்கையின் அனுபவத்தை எழுதுகின்றார். நம் மனமும் புதிதாகி '' பரிசுத்தமாகுலை பலனைக''ப் பெற்றுக் கொள்ளவேண்டுமானால் பவுலைப் போல தினம் தினம் அர்ப்பணிப்பு தேவை கூட்டங்களில் அர்ப்பணித்து விட்டு வீடு வந்தவுடன் மறந்து விடுகின்றனர் பலர். பவுலைப்போல ஆழமாக அர்ப்பணித்து தொடர்ந்து நிலைத்திருந்தால் தூய ஆவியானவர் நம்மை நிரப்புவார், பரிபூரண வாழ்வுக்கு வழி நடத்துவார்.

3. அசையா விசுவாசம்:

"நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" (II திமோ 1:12) என்று தான் நம்புகிற இயேசுவைப் பற்றியும் அவரிடத்தில் பெற்ற 'நற்செய்தியைப்' பற்றியும் தெளிவாக எழுதுகிறார். அவர் தேவனை நேராக தரிசித்திருந்தார். (I கொரி 15:8) மூன்றாம் வானம் வரை சென்று திரும்பியவர் (II கொரி 12:2). ஆகவே அவர் கண்டு விசுவாசித்தவர். "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" (ரோமர் 8:36) என்று மார்தட்டிக் கேட்கிறார். உபத்திரவமோ, வியாகுலமோ, மற்றும் கிறிஸ்துவுக்காக அவர் அனுபவித்த பாடுகளோ (II கொரி 11:23-27) அவருடைய விசுவாசத்தை அசைக்க முடியவில்லை மாறாக, அவரை பலப்படுத்தியது கட்டுகளையும், உபத்திரவங்களையும் சந்திக்க எருசலேமிற்கு செல்லும்போது, "ஆகிலும் அவைகளில் ஒன்றையும் குறித்துக் கவலைப்படேன். என் பிராணனையும் அருமையாக எண்ணேன் ... நான் இயேசுவிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" (அப் 20.24)என்று கூறுகிறார். இன்று நமக்கு பவுலைப் போல், ஆண்டவர் மேல் அசையா விசுவாசம் இருக்குமானால் பிரச்சனைகள் நம்மை தேவ பணிசெய்வதை தடுத்து நிறுத்த முடியாது

4. அயரா உழைப்பு:

கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்." (ரோமர் 15:21) என்பது அவரது வாஞ்சை. ஆகவே அவர் எருசலேம் துவக்கிச் சுற்றிலும் இல்லிரிக்கம் தேசம வரைக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்" என்று ரோமர் 15 19இல் தன் பணியைப் பற்றிக் கூறுகின்றார். குறுகிய காலத்தில் மூன்று மிஷனெரிப் பயணங்களை மேற்கொண்டு கிட்டத்தட்ட 'ஆசியா முழுவதையும்' நற்செய்தியினால் நிரப்பினார். பவுலுக்கு இப்போதுள்ள வசதிகள் அன்று இருந்திருக்குமானால் அவர் உலகம் முழுவதையும் நற்செய்தியால் நிரப்பியிருப்பார் சிறைச்சாலை அவரது உழைப்பைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அரண்மனையெங்குமுள்ளவர்களுக்கு' நற்செய்தி எட்ட அது உதவியது. ஆகவேதான் அவர் மரணம் நெருங்கும்போது "நல்லபோராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன்" என்று எழுதுகிறார் பவுலுடைய அயராத உழைப்பு நம்மைச் சவாலுக்குள்ளாக அழைக்கிறது

5. ஆத்தும பாரம்:-

"கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது" என்று II கொரி 5:14 இல் அவர் உற்சாகமாக செயல்பட்டதின் இரகசியத்தை எழுதுகிறார். கிறிஸ்துவின் அன்பை ஆழமாக அறிந்து, ஆத்துமாக்கள் மாற்றப்பட, துடிதுடிப்புடன் உழைத்தார். இன்று அநேகர் கிறிஸ்துவின் அன்பினால் ஏவப்படாமல் கிறிஸ்தவப்பணியை 'கடமை'யாக எண்ணிச் செய்கின்றனர்

ஜெபத் துணைவன்

★ பிப்ரவரி 10 முதல் 12 வரை மணக்காடு (பாளையங்கோட்டை) CSI ஆலயத்தில் நடைபெற்ற சீடத்துவ முகாமில் பங்கேற்ற சுமார் 50 மாணவர்கள் பரிசுத்த வாழ்க்கையில் பலப்பட ஜெபியுங்கள்.

★ மார்ச் 10, 11 யில் வைகை அணையில் நடைபெற்ற சீடத்துவ முகாமில் பங்குபெற்ற 35 மாணவர்கள் 20 பட்டதாரிகள் வரும் நாட்களில் வல்லமையாய் செயல்பட ஜெபியுங்கள்.

★ விக்கிரமசிங்கபுரத்தில் மார்ச் 3, 4 ஆகிய நாட்களில் Missionary Seminar நடைபெற்றதில் 20 பேர் பங்கு பெற்றனர். தூத்துக்குடியில் 10, 11 யில் நடைபெற்றதில் சுமார் 100 பேர் பங்கு பெற்றனர். இதன் வாயிலாக மிஷனரி பாரம் பெற்றோர் தேவ சித்தத்தின்படி செயல்பட ஜெபியுங்கள்.

★ தர்மபுரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாவட்ட பட்டதாரிகள் செயற்குழுவிற்காக ஜெபியுங்கள். மார்ச் 11 அன்று செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

★ உடன்குடி, திருச்செந்தூர், சங்கரன் கோவில், கோவில்பட்டி, அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களில் புதிய வகையில் வளர்ச்சி பெற்றுவரும் EU/EGF ஊழியங்களுக்காக துதிப்போம். கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட ஜெபியுங்கள்.

★ திருச்சி, சென்னை மதுரை ஆகிய இடங்களில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள ICEU அங்கத்தினர்களுக்காக வரும் ஆண்டில் ஆவியானவரின் வல்லமையோடு செயல்பட ஜெபியுங்கள்.

★ சென்னை, பட்டதாரிகள் புதிய செயற்குழுவிற்காகவும்,

★ ஏப்ரல் 9-24தேதிகளில் கோத்தகிரியில் நடைபெறும் National Staff Conference க்காக ஜெபிப்போம்.

★ சென்னையிலுள்ள UESI அலுவலகக் கட்டிட விரிவுப்பணிகள் முடிந்ததற்காக துதிப்போம். அங்கிருந்து நடைபெறக்கூடிய பணிகளுக்காக, கூட்டங்களுக்காகவும் ஜெபிப்போம்.

★ **STATE BELIEVING VETERINARIA'S MEET '84**
Dates : APRIL 14 to 15;
Place : TTS, ARASARADI
Speaker : Dr. BOOSANRAJ THOMAS B. V. Sc (IEM)
Contact :
Dr. T. S. TAMILSELVAN,
B 9/3 K. K. Nagar,
Madurai - 20.

கோடை விடுமுறையில் நடைபெறவிருக்கும் முகாம்களுக்காக ஜெப நாட்களை குறித்து உபவாசத்தோடும், பாரத்தோடும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

(13 ம் பக்க தொடர்ச்சி)

படும் கருத்துக்களைச் சேகரிக்கும் பயிற்சியாக மாத்திரம் அமைந்து விடக்கூடாது. பரிசுத்த ஆவியானவர் சத்திய வேதத்தின் ஆழமான சத்தியங்களை நமக்குப் போதிக்கும்படி அவரைச்சார்ந்திருப்பது மிகவும் அவசியம்.

திரு சாம் மனோகர், திருச்சி.

Form IV (See Rule 8)

1.	Place of Publication	—	Tiruchy
2.	Periodicity of Publication	—	Monthly
3.	Printer's Name	—	Mr. C. Barnabas Paul Paul Printers & Publishers 15, P. R. N St Tiruchy-17.
4.	Publisher's Name	—	Mr James Ratnaraj
	(a) Nationality	—	Indian
	(b) Address	—	UESI-TN Office Guru Medical Hall Tiruchy-17
5.	Editor's Name	—	Mr. James Ratnaraj
	(a) Nationality	—	Indian
	(b) Address	—	UESI-TN Office Guru Medical Hall Tiruchy-17.
6	Names and Addresses Of Individuals who own the newspaper and Partners of share holders Holding more than 1% of the total capital	—	UESI-TN (Union of Evangelical Students of India-Tamil Nadu) Guru Medical Hall Tiruchy-17

I, James Ratnaraj, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

JAMES RATNARAJ

Dated : APRIL 1984

(Signature of Publisher)

Tharisana Sudar

ஜெபியுங்கள் ! பங்குபெறுங்கள் !

நற்செய்திப் படை '84 (Penetration Teams)

தமிழ்நாட்டில் சுமார் 1,700 மேல் நிலைப்பள்ளிகள் உள்ளன. 85% க்கு மேலான பள்ளிகளில் ஜெபக்குழுக்கள் இல்லை நற்செய்திபடை மூலமாக ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்க மூன்று குழுக்கள் தேவை (30 நபர்கள்) இப்பணியில் விருப்பமுள்ள விசுவாசிகள் ஜெபித்து, குழு இயக்குனருக்கு எழுதுங்கள்.

ஊழிய விபரம் :

முதல் குழு பணி நாட்கள்	:	11-6-84 to 25-6-84
இரண்டாம் ,, ,,	:	1-7-84 to 15-7-84
மூன்றும் ,, ,,	:	16-7-84 to 30-7-84
பணிக்குத் தேவையான ஆட்கள்	:	30 (Students & Seniors)
தேவையான பணம்	:	ரூ. 8,000
குழு இயக்குனர்	:	M. Pitchaiah, Trg officer, BHEL, Trichy-620014.

கேள்வி - பதில்

1. என் கல்லூரியில் வேலை பார்க்கும் ஒரு கிறிஸ்தவ பேராசிரியர் புகை பிடிக்கிறார் நான் புகை பிடிப்பதில் என்ன தவறு?

முதலாவதாக, ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய சரீரமும் தேவனுடைய ஆலயம் என்பதை நீ அறிய வேண்டும் (1 கொரிந்தியர். 3:16-17) ஒருவன் புகைபிடிக்கும் போது அவனுடைய நுரையீரல் பாதிக்கப்படுகிறது. ''ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்'', என்று வேதம் கூறுகிறது. ஆகவே புகைபிடிப்பது பாவமாகும்.

இரண்டாவதாக, ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். ''நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்.'' (1 பேதுரு 2:21) தேவனுடைய வசனத்திற்கு ஒவ்வாத பழக்கங்களில் ஈடுபட்டிருக்கிறவர்கள் யாராயிருந்தாலும், நாம் அவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றக்கூடாது.

2. நான் ஒரு கிறிஸ்தவ மாணவி. என்னோடு பயிலும் பிற மாணவிகளைப் போல நானும் நவநாகரீக உடைகளை உடுத்தலாமா?

நல்ல அடக்கமான (modest dress) ஆடைகளை அணிவதில் தவறில்லை. நமது உடை சுத்தமாகவும், எளியதாகவும் இருத்தல் அவசியம். மேலும் பிற மாணவிகளைப் போலவே நவநாகரீக (fashionable) உடை அணிய விரும்புவது, 'உலகத்தோடு ஒத்த வேஷம் தரிப்பதாகும்'. (ரோமர் 12:2) இதனை தேவன் விரும்புவதில்லை. என் மனமெல்லாம் உடை உடுத்துவதிலும், வெளி அலங்கரிப்பிலுமே சார்ந்திருக்குமென்றால், அது தவறாகும் பிறரை, குறிப்பாக பிற பாலாரை (opposite sex) கவரும் வண்ணம் உடை உடுத்துவதும், இளம் விசுவாசிகளுக்கு இடையூறாக உடை அலங்காரம் செய்வதும் தவறாகும் உடை வாங்கும் போதும், அதனை அணியும் போதும் ஜெபித்து செயல்படு. தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதான 'உள் அலங்கரிப்பு' உனக்கு மேலான அலங்காரமாயிருக்கட்டும் (1 பேதுரு 3:3,4) இன்றைய உலகில் 'நாகரீகம்' என்ற போர்வையில் உலாவி வரும் 'அநாகரீக' ஓநாய்க்கு எச்சரிக்கையாயிரு.

3. நான் 'வேதத்தை ஆழ்ந்து கற்க விரும்புகிறேன். அதற்காக நான் எப்படிப் படிக்க வேண்டும்?

வேதத்தைப் படித்து, ஆராய்வதற்கு, நமது வேத புத்தகத்தோடு, வேறு பல மொழி பெயர்ப்புக்களையும் (other translations-versions) பயன்படுத்த வேண்டும். மேலும் வேத அகராதிகளையும், (Bible dictionary) வேத விளக்க நூல்களையும் (Commentary & Concordance) பயன்படுத்தலாம். நாம் கற்றுக் கொள்ளும் சத்தியங்களைக் குறித்து வைத்துக் கொள்ள ஒரு குறிப்பேடும் (note-book) அவசியம் நமது வேத ஆராய்ச்சி, பிற நூல்களில் காணப்

வாழ்க்கையின் முடிவில்

ஒரு மாதத்தின் முடிவிலோ, வருடத்தின் முடிவிலோ பின்னேக்கிப் பார்க்கும் பொழுதும் இதேவிதமாகக் காலங்கள் எவ்வளவு வேகமாகக் கடந்து சென்று விட்டன என்று உணர்வோம். வாழ்வின் முடிவில், கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து, பவுல் அப்போஸ்தலருடன் நாமும் சேர்ந்து ''நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன் இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார் ...'' எனக் கூற இயலுமா ?

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கு முன், ஒரு பெண் விலையேறப் பெற்ற தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினுள். சிலர் அவளைக் குறித்து முறுமுறுக்கையில் இயேசு, ''... இவள் தன்னுல் இயன்றதைச் செய்தாள் ...'' எனக் கூறி அவள் செய்த காரியத்தை அங்கீகரித்தார். நம் வாழ்வு முடிந்து, ஒரு நாள் கர்த்தரின் சமூகத்தில் செல்லும் 'பொழுது அவர் நம்மைக் குறித்து ... இவள் (இவன்) தன்னுல் இயன்றதைச் செய்தாள் (செய்தான்)' எனக் கூற இயலுமா ? திருச்சபையின் முதல் இரத்தச் சாட்சியான ஸ்தேவானின் மரணத்தைக் குறித்து அப்போஸ்தலர் நடபடிகள் 7-ஆம் அதிகாரத்தில் வாசிக்கையில் 'மனுஷ குமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்' என ஸ்தேவான் கூறியதைக் காண்கிறோம், தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கும் இயேசு ஸ்தேவானின் ஆவியை ஏற்றுக்கொள்ளுவதற்காகவே எழுந்து நின்றுரோ ? வாழ்வு முடிந்து கர்த்தரின் சமுகம் செல்லும் பொழுது இவ்வித வரவேற்பு கிட்டும் வகையில் நாம் வாழ்வோமா ?

(10ம் பக்க தொடர்ச்சி)

''கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும்.. நான் கடனாளியாயிருக்கிறேன். என்னுல் இயன்ற மட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன்'' என பவுல் ரோமர் 1:14,15-ல் எழுதுகிறுர். தான் கடனாளி என்று எண்ணி அவர் செயல்பட்டார். அத்தேனே பட்டணம் விக்கிரகங்களினுல் நிறைந்திருந்ததைப் பார்த்தவுடன், ''ஆவியில் வைராக்கியமடைந்து, ஜெப ஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை பண்ணினுன்'' என்று அப் 17;16, 17ல் வாசிக்கிறோம் இந்தியாவின் தேவை (80 கோடி மக்கள்) யைப் பார்த்து, ஆவியில் வைராக்கியமடைந்து அவருக்காகச் செயல்படும் பக்களைத் தேவன் தேடுகின்றுர். நாம் பவுலைப்போல் மாறி அவருக்காக, ஆத்துமபாரத்தோடு அயராது செயல்பட தேவன் உதவுவாராக.

UESI-TN & TNEGF
SUMMER TRAINING CAMPS
1984 SCHEDULE

FOR WHOM	DATES, PLACE	CO ORDINATORS
ENTRAL DISCIPLESHIP TRAINING CAMP : H. Sr. Sec Boys (10th, 11th & 12th Std.)	MAY 5—11 St. John's Vestry School CANTONMENT, TIRUCHY-1	Mr. M. PITCHAIAH, B.E Training Officer BHEL TIRUCHY-620 014.
OURSE ON LEADERSHIP : Teachers, Graduates, Seniors & Familes	MAY 6—11 St John's Vestry School CANTONMENT, TIRUCHY-1	Mr. SAM MANOHAR, M Tech K 3/12, Kamarajapuram Township BHEL, TIRUCHY-620 620 014.
ENTRAL - LADIES LEADERSHIP TRAINING CAMP : H S S & College Girls only	MAY 23—30 Kolle Memorial Creche Nursing Trg Centre DEVADANAM, TIRUCHY-2 Phone : 27068	Miss DEBORAH GLORY UESI-TN Office, Guru Medicals TIRUCHY-620 017.
OUTH TN-LADIES LEADERSHIP TRAINING CAMP H S S & College Girls only	MAY 21—27 Deaf & Dumb School KOTTARAM, KANYAKUMARI Dt	Miss. JEBAKANI 9 A, Meenakshipuram II Street TUTICORIN-628 002.
OUTH TN. BOYS LEADERSHIP TRAINING CAMP H S S & College Boys only	MAY 23 - 30 Deaf & Dumb School Palayamkottai TIRUNELVELI-627 002.	Mr SELWYN VICTOR 53, Queen Street NAZARETH, NELLAI DT.
ENTRAL COLLEGE STUDENTS TRAINING CAMP (Boys & Girls)	JUNE 2 — 10 Bishop Heber College PUTHUR, TIRUCHY-17.	Prof. SAM JOHN 53/2, Housing Unit TANJORE-613 007.
UICEU & COMMITTE MEMBERS TRAINING CAMP (Boys & Girls)	JUNE 2 — 10 BISHOP HEBER COLLEGE PUTHUR, TIRUCHY 17.	Mr ISAAC GNANASINGH C. S I Compound Kottaram (PO), K K Dt
NORTH T N. LEADERSHIP TRAINING CAMP : H.S.S & College Students (Boys & Girls)	MAY 20—30 St Marys Matriculation School RED HILLS, MADRAS.	Mr DAVID CHANDRAN No 5, Village Street SATHUMA NAGAR, MADRAS-19.
WEST T. N. LEADERSHIP TRAINING CAMP H S.S. & College Students (Boys & Girls)	MAY 25 - 31 THADAGAM, COIMBATORE	Mr PAUL RAJENDRAN 16 F. Housing Unit, Race Course Road COIMBATORE-641 018
MADURAI, RAMNAD Dts TRAINING CAMP H. S. S. & College Students (Boys & Girls)	MAY 26 — 2 JUNE C. S. I SCHOOL, MANAMADURAI RAMAND Dt	Mr S. R JEBAKUMAR 16 SIB Officers Colony II MADURAI-16.
NORTH ARCOT DISCIPLESHIP CAMP H S S. & College Students (Boys and Girls)	MAY 11—15 CONCORDIA Hr Sec SCHOOL, PUDUR VANIAMBADI	Dr. SUNDARARAJ IVPM—Quarters, RANIPET, N. A. Dt.
MISSIONARY CAMP: Students, Seniors and Families	MAY 20—29 ODDANCHATRAM, MADURAI DT.	Mr. PAUL PERINBAM 6 A. VI Street, Toovepuram, TUTICORIN-628 003.
BIBLE SEMINAR : Final Year College Students Boys & Girls	JUNE 2—15 'BETHEL' DANISHPET, SALEM DT	Dr JEYAPAUL AZARIAH King Hostel MADRAS-620 007.

N.B.—விசுவாச மாணவ மாணவிகளே, பட்டதாரிகளே முகாம்கள் குறித்த விபரங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். உங்களது பெயர்களை உடனே பதிவு செய்துஜெபத்துடன் பங்கு கொள்ளுங்கள்.

"அரியதோர் வாய்ப்பு"

★★★ விசுவாச மாணவ மாணவிகளே, இவ்விடுமுறை நாட்களை எவ்விதம் தேவனுக்கு பிரியமான முறையில் செலவிடுவது என யோசித்து ஜெபித்துக் கொண்டிருப்பீர்கள். அநேகர் வேலை தேடும் முயற்சியிலும், மேற்படிப்பிற்கென்றும் பிரயாசப்பட்டுக் கொண்டிருப்பீர்கள். உங்களுக்காக தமிழகமெங்கிலும் பலவிதமான சிறப்பு முகாம்களை ஒழுங்கு செய்துள்ளோம்.

நீங்கள் ஜெபிக்கவும், திட்டமிடவும் இவ்விதழில் அனைத்து முகாமின் விபரங்களையும் கொடுத்துள்ளோம். பெண்களுக்கென்றும், வேலை பார்ப்பவர், பட்டதாரிகள், மாணவர் பணியில் ஈடுபட விரும்புவோர்களுக்கும் சிறப்பு முகாம்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. உடனே முடிவு செய்து தொடர்பு முகவரிக்கு எழுதி பெயரை பதிவு செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

★★★

PRINTED MATTER

Registered No. M2/6635/81

Regd. No. TN/TR/59

Licenced to post without Prepayment

29. Mr. Dharmasadu, Thirumaraiyur,
Nazareth Post,
Tirunelveli Dist.

Return requested:
THARISANA SUDAR
UESI-TN OFFICE,
GURU MEDICAL HALL,
TRICHY - 620017.

Paul Printers, Puthur, Trichy-17.